

சேக்கிழார் சிந்தனை - 1

தமிழகம் செய்த தவப்பயனாய்த் தோன்றிச் சைவப் பயிர் வளர்த்த சான்றோர், தெய்வச் சேக்கிழார். அன்னார் அருளிச்செய்த நூலே பெரிய புராணமென்னும் திருத்தொண்ட புராணமாகும். இந்நூலின் உள்ளுறைப் பொருள் ஒன்று 'இறைவன்', மற்றொன்று 'தொண்டு.' இவ்விரண்டின் துணையால் உலக மக்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வான் உறையும் தெய்வமாகலாம்.

காப்பியங்கள் யாவும் அறங்கள், ஒழுக்கங்களையே வற்புறுத்தும்; கடவுட்பற்றையே கூட்டும்; ஆனால், இவற்றைச் சேக்கிழார் வற்புறுத்துவதுடன் பிறவியின் குறிக்கோள் இறைவன்பால் பக்தி செய்தலே, அவனை அடையும் வழி மக்கள் தொண்டு செய்தலே என்றும் இந்நூலில் பெரிதும் வற்புறுத்துகின்றார். காப்பியத்துள், "தன்னலத்தை அறவே விட்டு அடியார் தொண்டினால் மட்டுமே இறைவன் அருளைப் பெறுதல் கூடும்" என்று வள்ளலார், காந்தியடிகள் முதல் இன்றைய சான்றோர் அனைவரும் கூறும் பேருண்மையை அன்றே (800 ஆண்டுகட்கு முன்) உலகிற்கு உணர்த்திய தெய்வச் சேக்கிழார், அதை உணர்ந்து செயல்பட்டு உலக மக்கள் உய்யவே, தம் காப்பியத்திற்குத் தொண்டர் புராணம் என்று பெயர் தந்துள்ளமை அறியத்தக்கதாம்.

சேக்கிழார் பெருமான் படைத்த நாயன்மார் அறுபத்துமூவரில் திருநீலகண்ட நாயனாரும் ஒருவர் ஆவார். சிவபெருமானுடைய திருப்பெயர்களில் ஒன்றாகிய

'திருநீலகண்டம்' என்ற திருப்பெயரைப் பேரன்புடன் ஓதிவந்ததால் 'திருநீலகண்டர்' என்னும் திருப்பெயர் பெற்றார்.

அடியவராவார் அகப் பண்புகள் - புற அடையாளங்கள் அளவில் அமைந்தவராய் ஏதோ இறைவனை வழிபட்டுக் கொண்டு முயற்சி, தொழில் ஒன்றும் மேற்கொள்ளாமல் பிச்சை பெற்றும், யாத்திரை என்று ஊர் ஊராய்த் திரிந்து பிறர் தருவதை ஏற்றுச் சோம்பித் திரிதல் கூடப் பிறருக்குச் சுமையாயிருத்தலாகும். மேற்சொன்ன பண்புகளையும், ஒழுக்கங்களையும் உடையவராய் இருத்தலோடு, முயற்சி யாளராயும் ஏதாவது ஒரு தொழில் செய்யும் உழைப்பாள ராயுமிருத்தல் வேண்டும்.

அவ்வுழைப்பும் ஏதோ தன் வயிற்றுப்பாட்டுக்கும், குடும்பத்துக்கும் போதுமான அளவில் சிறியதாக இருந்தால் போதும் என்று எண்ணாமல்,

> 'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்(கு) - எண்பொருள்
> ஏனை இரண்டும் ஒருங்கு.'

என்று குறள் கூறுமாறு, வேண்டிய அளவுக்குமேல் பொருளீட்டல் வேண்டும். அதனால் அறத்தையும் செய்யலாம்; இன்பத்தையும் அடையலாமன்றோ?

நாயனார் ஏராளமான மட்பாண்டங்களைச் செய்து குவித்துச் சிவனடியார்கட்குத் தாம் செய்த பாண்டங்களில் 'திருவோடுகளை' மனமகிழ்ச்சியோடு அளித்து வந்தார். உண்பதற்கே உடலெடுத்த இழிந்தோர்க்கு அளிப்பது போல, அடியவர்க்குப் பரிவினால் அளித்தல் கூடாது; வேண்டா வெறுப்பாகக் கொடுத்தலுமாகாது; என்ன செய்வது வந்துவிட்டாரே என்ற வருத்தமுடன் தருதலும் தவறாகும். தம்மை உயர்ந்தோராகக் கருதிக்கொண்டு, அடியவரை எளியவராகக் கருதிக் கொடுத்தலும் குற்றமே. மாறாக 'இவ்வடியார்க்குக் கொடுக்கும் பேறு பெற்றோமே' என்று நிறைந்த மகிழ்ச்சியுடன் கொடுப்பதே, 'அடியார்க்குக் கொடுக்குமாறு சிவன் நம்மிடம் இச்செல்வத்தைத் தந்துள்ளாரே' என்ற உணர்வுடன் கொடுப்பதே அடியார்க்களிக்கும் முறையாகும். இவ்வருங்கருத்துகள் எல்லாம் விளங்கலே.

'அளவிலா மரபின் வாழ்க்கை மட்கலம் அமுதுக் காக்கி
வளரிளந் திங்கட் கண்ணி மன்றுளார் அடியார்க் கென்றும்
உளமகிழ் சிறப்பின் மல்க ஓடளித்து ஒழுகினார்'

என்று நாயனார் மேல் ஏற்றிக் கூறினார்.

'நாடிய மனத்தினோடு நாயன்மார் அணைந்த போதில்
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார்'

என்றும்,

'யாதொன்றும் என் பக்கல் உண்டாயின் அஃது
எம்பிரான் அடியவர் உடைமை'

என்று கூறுவதாலும் பிறருக்குக் கொடுத்தல் என்பதும் நாயன்மாருக்கு இன்றியமையாதது என்று உணர்தல் வேண்டும்.

திருநீலகண்டர் மனைவியார் அழகினாலும், கற்பு மேம்பாட்டினாலும் சிறந்து விளங்கினார். அப்படியிருந்தும் நாயனார் தம் இளமையின் மிகுதியால் இன்பம் துய்ப்பதில் எளியராகி விலைமகள் ஒருத்தியைக் கூடி இன்புற்றார். இதையறிந்த மனைவியார், நாயனார் தம்மைத்தழுவ வந்தபோது மானம் மிகுதியால், "திருநீலகண்டம் சாட்சியாக நீர் என்னைத் தீண்டலாகாது" என்று ஆணையிட்டார்.

இவ்வுயர்ந்த ஆணையைக் கேட்ட நாயனார் சிவபெருமான் மீது கொண்ட பேரன்பால்; அது முதல் தம் மனைவியாரையே அல்லாமல் எந்த மாதரையும் மனத்தாலும் நினையாதவரானார்.

இவர்தம் பேரன்பினை உலகமறிந்து உய்யச் சிவபெருமான் சிவனடியார் வேடங்கொண்டு நாயனாரிடம் வந்து திருவோடு ஒன்றைத் தந்து, 'இதை வைத்திரு, நான் வந்து கேட்கும்போது கொடு' என்று சொல்லிவிட்டுச் சென்றார். சில காலம் சென்று அடியவர் நாயனாரிடம் 'ஓட்டைத் தா' என்று கேட்க, நாயனார் வைத்த இடத்தில் தேடினார். அது காணவில்லை (சிவபெருமான் அதை மறையுமாறு செய்துவிட்டார்) நாயனார் ஓட்டைத் திருடியதாகச் சிதம்பரத்திலுள்ள நீதிமன்றத்தில் சிவனடியார் வழக்குத் தொடுத்தார்.

நீதிபதி, நாயனாரைப் பார்த்து 'நான் திருடவில்லை என்று உனது பிள்ளையுடன் நீரில் மூழ்கிச் சத்தியம் செய்' என்றார். 'பிள்ளை இல்லையே' என்று நாயனார் சொல்ல, நீதிபதி அப்படியானால் 'உன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு நீரில் மூழ்கிச் சத்தியம் செய்' என்றார். நாயனார் குளத்திலிறங்கி ஒரு தண்டின் மறு பகுதியைத் தன் மனைவியைப் பிடித்துக்கொள்ளச் செய்து, 'ஓட்டை நான் திருடவில்லை' என்று சொல்லி மூழ்க முயன்றார். 'நிறுத்தும், ஒப்புக்கொள்ளமாட்டேன். உன் மனைவியின் கையைப் பிடித்துக்கொண்டு மூழ்கும்' என்றார்.

இக்காட்சியைக் காண ஊரே கூடியிருந்தது. அப்போது நாயனார் தாம் மனைவியைத் தீண்டாமைக்குக் காரணமான தவறுதலான நடத்தையை எடுத்துச் சொன்னார். அதைக் கேட்ட சிவனடியார் அமைதியாயிருக்க, நாயனாரும் அவரது மனைவியாரும் தண்டின் இரு முனைகளைப் பற்றிக்கொண்டே நீரில் மூழ்கி எழுந்தனர். என்ன வியப்பு! படு கிழவரும் கிழவியும் மூப்பு நீங்கி இளமைமிக்க நம்பியும் நங்கையுமாக விளங்கினர். இறைவன் தோன்றி, 'எக்காலத்தும் இவ்விளமை நீங்காது என்னுடனிருப்பீர்' என்று அருளி மறைந்தார்.

கொலை, களவு, கள் இவற்றைப் பெரும்பாலர் எளிதில் நீக்கிவிடலாம். பொய்யுரைத்தலைப் பெருமளவு நீக்கிவிடலாம். ஆனால், துறவி முதல் மிகச் சாதாரண மனிதன் வரை உள்ளத்துள் உடலில் பொங்கி எழும் இன்ப உணர்வாம் காமமிகுதி விலக்க முடியாதது. அவ்வுணர்வை இன்பப்பேறு கருதி இறைவன் மாந்தர்க்கு அளித்துள்ளான்.

ஆயினும் உலக வாழ்வு தொல்லை - துயரிலாது இனிமையாக நடைபெறப் புலனுணர்வை ஆன்றோர்கள் முறைப்படுத்தி வைத்து, ஒழுக்கங்களை அமைத்துள்ளனர். நாயனார் வரலாற்றில் அவர்தம் அழகிய அருமை மனைவியோடு கலந்தின்புற்றமை பக்தி நெறிக்கு இழுக்கன்று. பரத்தையை நாடிச் சென்று இன்புற்றதே தவறு.

சிவமந்திரத்தின் மீது தம் மனைவியார் ஆணையிட்டதே நம் நாயனார்க்குப் புலன் இன்பத்தை நினையாத மன உறுதி அளித்தது.



சேக்கிழார் சிந்தனை - 2

சைவ சமயம் பற்றி எழுந்த புராணங்களுள் மூன்று புராணங்கள், இறைவனின் முக்கண்கள் எனப் போற்றப்பெறும் வழக்குண்டு. ஞாயிறு, திங்கள், தீ ஆகிய மூன்றும் இறைவனுடைய முக்கண்கள். ஞாயிறு, பெரிய புராணம், திங்கள் திருவிளையாடல் புராணம், தீ கந்தப்புராணம். இருள் இரண்டு. ஒன்று அகஇருள்; மற்றொன்று புற இருள். 'புறஇருள் நீக்கும் கதிரவனைப் போல, அக இருளை நீக்கும் இந்நூலைத் திருத்தொண்டர் புராணம் என்போம்' எனச் சேக்கிழார் பெருமானே தமது நூலாகிய பெரிய புராணத்தில் கூறுகிறார்.

சேக்கிழாரது பெரிய புராணத்தில் வரும் நாயன்மார்களுள் ஒருவர் கண்ணப்ப நாயனார். திண்ணன் என்பது பெற்றோர் இட்ட பெயர். திண்ணன் வேட்டுவர் குல முறைப்படி வேட்டைக் கலையில் தேர்ந்தார். ஒரு நாள் காட்டில் வேட்டையாடுகையில் காளத்திமலை மீது ஏறியவர் அங்கே சிவலிங்கத்தைக் கண்டார். அவ்வளவில் அளவிலா அன்பு கொண்டார்; தம்மை மறந்தார். அவனையே நினைத்தார். அவனுக்காகவே வேட்டையாடி அவன் முன் வைத்துப் பேரன்புடன் உண்ணுமாறு வேண்டினார். இரவில் அவனுக்குக் காவலாக அவன் அருகில் அவனையே உற்றுநோக்கிக் கொண்டே விழித்திருந்தார். தம்மைப் பற்றிய உணர்ச்சியே இல்லாமல் ஆறு நாட்கள் உண்ணாது பகலில் வேட்டையாடி இரவில் இறைவனைக் காத்திருந்தார். இறைவனிடத்து அவர் கொண்ட அன்பு வான் போல் பெரிது வளர்ந்தது. ஆறாம் நாளிரவு சிவபிரான் இவர் பேரன்பை உலகிற்கு உணர்த்தத் தம் வலக்கண்ணில் இரத்தம் கொட்டுமாறு இருந்தார். இதனைக்

கண்டு பலவாறு புலம்பி அழுத திண்ணனார் தம் கண்களில் ஒன்றைப் பறித்து வலக் கண்ணிருந்த இடத்தில் அப்பினார். இரததம் நின்றது. திண்ணனார் அளவிலா மகிழ்ச்சியடைந்தார்.

இவர் அளவிலாப் பேரன்பை உலகிற்கு உணர்த்த இறைவன் மீண்டும் மற்றோர் கண்ணில் இரத்தம் பெருகச் செய்தான். இப்போது நாயனார் வருந்தவில்லை. தமக்கு வேறொரு ஞானக்கண் இருப்பதை எண்ணி உடனே அதனையும் பறித்தெடுத்து இறைவன் கண்ணில் அப்ப எண்ணினார். உடனே அதனைப் பறித்தெடுக்கக் கண்ணருகில் அம்பை ஊன்றினார். அவ்வளவில் சிவபெருமான் அவர் கையைப் பிடித்துக் கொண்டு, கண்ணப்பா நில்! நில்! மாறாத பேரன்பா! என் வலப்பக்கத்தில் இருப்பாயாக! என்று பேரருள் புரிந்தார் என்பதை,

‘செங்கண்வெள் விடையின் பாகர் திண்ணனார்
தம்மை யாண்ட
அங்கணர் திருக் காளத்தி அற்புதர் திருக்கை
அன்பர்
தங்கண்முன் இடக்குங் கையைத் தடுக்கு
மூன்றடுக்கு நாக
கங்கணர் அழுத வாக்குக் கண்ணப்ப நிற்க’

என்ற சேக்கிழார் திருவாக்கால் அறிகிறோம்.

நல்லுணர்வுகளும் தீய உணர்வுகளும் மக்களிடத்து இயல்பாக உள்ளன. ஒரே அளவிலல்ல, ஏற்றக்குறைவாயிருக்கும். சிலருக்குச் சில உணர்வுகள் ஒரு காலத்தில் இல்லாமல் இருக்கும். மற்றொரு பொழுது அவ்வுணர்வுகள் மிகுந்து காணப்படும். உணர்வின் அளவிற்கு ஏற்ப மக்கள் செயல்படுவர்.

மருத்துவமனைகளில், நகராட்சிகளில், அரசு அலுவலகங் களில் தொழில் செய்வார், வணிகர், பெரும் முதலாளிகள் தம் செல்வத்தைப் பெருக்கவும், தம் அதிகாரத்தை நிலைநாட்டவும் எவ்வளவு கொடிய தீமைகளை மக்களுக்குச் செய்கின்றனர்? நாட்டையே காட்டிக் கொடுக்கும் கொடியோரும் இருக்கிறார்களே. இன்னும் வல்லரசுகள் அணுகுண்டு வீசியும், நாடுகளுக்கு இடையே சண்டைகள் மூட்டியும் செய்யும் கொடுமைகளை நினைக்கவே நெஞ்சம் நடுங்கும், இம்மட்டோ?

போர்க்காலங்களில் போர் மறவர்களில் கயவர் சிலர் பிற நாட்டாரை அணு அணுவாகத் துன்பப்படுத்தியும், இறக்கும் வரையில் படுத்தும் பாடு எண்ணவும் கண்ணீர் வருமே!

மேற்காணும் கொடியவர்கள், தீச்செயல்கள் நடைபெற்ற தென்றால் உடனே நம்புவார். ஏனெனில் அவர்கள் உணர்விற்கு அவை எட்டும். அவர்கள் இயல்பும் அப்படித்தானே! ஆனால், நற்செய்கை, நற்பண்பு, உயர்ந்த பேரன்பு, வள்ளன்மை, ஒப்பில்லாத் தியாகச் செயல்கள் என்றால் அவற்றை உணர முடியாது.

இதுபோல் அவர்கட்கு இறைவனிடத்துக்கொண்ட பேரன்பால் அவ்விடத்தும், அவரடியாரிடத்தும் மெய்யுணர்வின் மேலோர் செய்யும் செயல்கள் விளங்கவே விளங்காது.

எத்தியோப்பிய நாட்டில் 1942-இல் நிகழ்ந்த போரில் வெளியிடத்தில் மாடு மேய்க்கும் ஓர் இளம் பெண்ணை, அந்நாட்டின் மேல் படையெடுத்து வந்த இத்தாலி நாட்டு வீரர்கள் நெருங்கி எத்தியோப்பியப் படை எத்திசையில் சென்றன என்று கேட்டனர். அவள் சொல்ல மறுத்தாள். உடனே அவளை மரத்தில் கட்டிவைத்து அடித்துப் பெரிதும் கொடுமை செய்தனர். நாட்டுப்பற்று மிக்க அவள், அடி தாங்காமல் எங்கே நாம் நம் வீரர்கள் சென்ற திசையைச் சொல்லி விடுவோமோ என்று பயந்து தன்னிடமிருந்த கத்தியை எடுத்து நாக்கை அறுத்து எறிந்தாள். நாட்டுப் பற்றற்ற இழிந்தோர் இதனை உணரார்.

தெய்வப்பற்றால் இதுபோல் அருஞ்செயல் செய்தார் பலர். உலகெங்கும் அன்றுமிருந்தனர்; இன்றுமுள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாக அருணகிரியார், முருகன் அருளை வேண்டிக் கோபுரத்தினின்று குதித்ததும், அறுபது ஆண்டுகட்கு முன் வாழ்ந்த தண்டபாணி அடிகளார் என்ற மாபெரும் புலவர் முருகன் அருள் வேண்டி மலையிலிருந்து வீழ்ந்ததும் என்று அறிதல் வேண்டும். கல்வியறிவில்லாத பொதுமக்களிடம் உணர்ச்சிகள் மிக மிகக் கூர்மையாக இருக்கும். அதனால் நன்மையாயினும், தீமையாயினும் முனைந்து செய்துவிடுவர்.

கண்ணப்பர் இத்தகையர்தாம். ஆனால் காதல் உணர்வுமிக்க கட்டிளமைப் பருவத்தே சிவபெருமானின் திருவுருவமாகிய சிவலிங்கத்தைக் கண்டவுடன் முன் பிறவிகளில் செய்த சிவத்தவத்தின் பயனாக அளவிலாப் பெருங்காதல் பெற்றார். இதனைச் சேக்கிழார்,

'முன்புசெய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்ப மான
அன்பினை எடுத்துக் காட்ட அளவிலா ஆர்வம்பொங்கி
மன்பெருங் காதல் கூர வள்ளலார் மலையை நோக்கி
என்பு நெக்குருகி உள்ளத்து எழுபெரு வேட்கை யோடும்'

என்று கூறுவதால் அறியலாம்.

இப்பெருங்காதலால், இறைவர்க்காக மூடத்தனமாகக் கண்ணைப் பேர்த்தெடுக்கவில்லை. இறைவன் உருவத்தில் இரத்தம் கொட்டுவதைக் கண்டு, அது தீர்க்கப் பச்சிலைச் சாற்றைப் பிழிந்தார். அப்போதும் கண்களிலிருந்து இரத்தம் நிற்கவில்லை. 'என் செய்தால் தீருமோ' என்றேங்கினார்.

'ஊனுக்கு ஊன் சேர்த்தால் நன்றாகிவிடும்' என்னும் பழமொழி அவர் நினைவுக்கு வந்தது. உடனே தம் கண்ணை அம்பால் பேர்த்து இறைவன் கண்ணில் அப்பினார்.,

'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை!' என்பார் கற்றோர். அதனைத் தாமே பெயர்த்தெடுத்தல் எவருஞ் செய்தல் இயலாது என்பது உண்மையே. இக்காலத்து இறந்தவர் கண்களை எடுத்துப் பார்வையற்றவருக்குப் பொருத்தி ஒளி தருவதைப் பார்க்கிறோம். கண் வங்கிகள் இருப்பதையும், கண் தானம் செய்வதையும் காண்கிறோம்.

அன்பில் தமக்கு ஒப்பில்லாத திண்ணனார்க்கோ அது இயலும். இதனால்தான் அன்பு வடிவமாக மாதவரான திருவாசகம் அருளிய மணிவாசகப் பெருமான் 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு உலகிலில்லை' என்று பாடினார்.

முற்றுந் துறந்த பட்டினத்தடிகளும், கண்ணப்பர் போலக் 'கண்ணிடத்து அப்ப வல்லேன் அல்லேன்' என்று தம் அன்பைக் குறைகூறும் முகத்தான் கண்ணப்பரின் இணையற்ற பேரன்பைப் போற்றியுளளார்.

'திருக்களிற்றுப் படியார்' என்னும் மெய்யுணரா நூலின் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர். அதற்காக அவர் அருளிய பாடல்,

'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்பன் ஒப்பதோர் அன்பதனைக் - கண்ணப்பர்
தாமறிதல், காளத்தியார் அறிதல் அல்லது மற்று
யாமறியும் அன்பன்று அது.'

சேக்கிழார் சேவடி போற்றி!





பசவர் வாழ்வும் வாக்கும்

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி தோன்றி வளம் பெருக்கி நிலம் காட்டும் திருநாடாம் கர்நாடக நாடு. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கததில் மக்கள் பல்வேறு சமயங்களில் பிணைந்தும் இணைந்தும் வாழ்ந்துவந்தனர். சமயக் கொள்கைகளோ மலையும் மடுவும் போல் மாறுபட்டவை. கொல்யாகம், சாதிபேத உயர்விழிவு, ஆண் பெண் பேதம் ஆகியவற்றைச் சமய நெறியாகப் போற்றுபவர் சிலர், உலகப் படைப்பு முதலியவற்றைச் சமய நெறியாகப் போற்றுபவர் சிலர், உலகப் படைப்பு முதலியவற்றுக்கு ஒரு முழுமுதல் கடவுளை ஏற்காதவர் வேறு சிலர், கொல்யாகத்தை மட்டும் தம்மளவில் செய்யாது தள்ளி அக்கொள்கைக்கு மெல்லவும் மாட்டாது விழுங்கவும் மாட்டாது ஆதரவு தந்தவர் மற்றும் சிலர். இது அன்றைய சமய நிலை.

12-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கருநாடக நாட்டில் கல்யாணபுரிச் சாளுக்கிய அரசின் கீழ்ச் சிற்றரசனாயிருந்த விச்சலன் என்பவன் காலசூரிய வம்சத்தைச் சேர்ந்தவன். சைனரின் ஆதரவைப் பெற்று சைன மதம் போற்றியவன். சாளுக்கிய வம்சத்துக்குத் துரோகம் செய்து அரசைச் சைனரின் ஆதரவுகொண்டு தன்னரசாக்கிக்கொண்டான். இவன் கல்யாணபுரியில் அமர்ந்து கி.பி. 1157 முதல் 1167 வரை ஆண்டான். இவன் 'தைலப்பா' என்னும் மன்னன் கீழ் தண்டல் நாயகமாகப் பணியாற்றிப் பின் கல்யாணியின் மன்னன் ஆனவன். அச்சமயம் நாட்டில் எங்கும் அராஜகம் மேற்பட்டுக் குழப்பமும், அச்சமும் மலிந்தன. மக்கள் அன்றாட நலவாழ்வுக்கு நடைமுறை வாழ்வுக்குத் தண்டனைகள் பல ஏற்றப்பட்டன. இது அன்றைய சமூக நிலை.

இத்தகைய சமய சமூக நிலைகளால் நாடு நலங்குன்றிப் பாழ்பட்டது. மக்கள் கதிகலங்கித் தவித்தனர்.

இந்நிலையில் அறிஞர்களில் பலர் நாட்டில் அவலத்தைப் போக்கி நல்ல அரசியலை உண்டாக்கிச் சமூகக் கோளாறுகளை அகற்றி மக்களுக்கு நல்லறிவு புகட்டிச் சமூகச் சீர்திருத்தம் செய்யும் ஆற்றலும், அறிவும், அருளும் பூண்ட அறவோர் ஒருவர், அரசியல் வல்ல அறிஞர் ஒருவர், தேசிகச் சமயப் போதகர் ஒருவர், சாதிபேத உயர்வழிச் சழக்கர் சொல் கேளா ஒருவர், ஆண் பெண் சமரச சமயர் ஒருவர், ஆகமம் அறிந்த நல்லவர் ஒருவர், மகான் ஒருவர் தோன்றமாட்டாரா என எண்ணினார், ஏங்கினார், இறைவனை வேண்டினார்.

கி.பி. 1125-ஆம் ஆண்டு பீஜப்பூர் மாவட்டம் பாகவாடியைச் சேர்ந்த 'இங்குளாபுரி' என்னும் சிற்றூரில் மாதரசன், மாதாம்பிகை என்னும் பெற்றோருக்குப் பசவேசர் பிறந்தார். பசவேசரை நந்தியின் அவதாரம் என்பர். யூதர்களின் கொடுமைகளை ஒழிக்க யூதர் குலத்தில் கிறிஸ்து பெருமான் தோன்றியது போலப் பிராமண குலத்தில் தோன்றினாரெனக் கொள்வோரும் உண்டு.

பசவர் இளமையிலேயே கடவுள் பக்தியும், வயதுக்கு மிஞ்சிய துணிவும், மன உறுதியும், தெளிவும், பகுத்தறிவும், கல்வியும், பொறுமையும், இரக்க நெஞ்சமும் பெற்றிருந்ததோடு கவிபாடும் திறனும் கொண்டு விளங்கினார்.

பாலப்பருவம் கடந்த பசவருக்குப் புரோகித வழக்கப்படி பூணூல் அணியும் வேளை வரவே பெற்றோர்கள் பசவரைச் சாதிச் சம்பிரதாயப்படி பூணூல் அணிவிக்கத் தொடங்கினார்கள். கூடியிருந்த அனைவரும் திகைக்கப் பூணூல் அணிந்துகொள்ள மறுத்தலின்றித் தனக்கு ஏற்கெனவே கூடலசங்கமேசகக் கடவுளால் லிங்காதரணம் செய்யப்பட்டிருக்கின்றதென்றும், அன்றிலிருந்து சாதிபேத உயர்விழிவு நிறைந்த வைதிகத் தர்மத்தைத் தான் நீக்கி விட்டதாகவும், சிவதர்மத்தை ஏற்றுக்கொண்டதாகவும் கூறினார். தன் அம்மானாகிய அமைச்சர் பலதேவர் உள்படப் பலரும் பசவரைப் பூணூல் அணிந்துகொள்ளப் பலவித நியாயங்கள் எடுத்துக்கூற அதற்குத் தக்கபடி காரணகாரியம் கூறிப் பூணூலணிய மறுத்துவிட்டார்.

அன்றிலிருந்து பசவேஸ்வரர் தம் பெற்றோர்களைவிட்டு நீங்கி வெளியேறிவிட்டார். பல்வேறு உலகானுபவங்களையும், சாத்திரானுபவங்களையும், சமயானுபவங்களையும், அரசியல் சமூக இயல்புகளையும் கண்டும், கேட்டும், சிந்தித்தும் தெளிவு கொண்டார்.

விச்சல மன்னரும் அமைச்சராய் இருந்த பலதேவர் பசவேசருக்குத் தாய்மாமனாதலின் பசவர் உயர்ந்த குணங்களாலும் தன்மைகளாலும் கவரப்பட்டு மகிழ்ச்சியுற்றுத் தன் திருமகள் கங்காம்பிகை என்பவளைப் பசவருக்கு வாழ்க்கைத் துணைவியாய்த் திருமணம் செய்து கொடுத்தார். சிறப்பாக இல்லறம் நடைபெறுவதற்கு வேண்டிய பொருள்களைத் தன் தகுதிக்கு ஏற்பத் தந்து சிறப்பித்தார். பசவர் மனைவி கங்காம்பிகையுடனும் சகோதரி நாகாம்பிகை யுடனும் கூடலசங்கமேசர் கோயிலுக்கருகில் வாழ்விடம் அமையப் பெற்று வாழ்ந்து வந்தார்.

நாளடைவில் பசவர், அரசர் விச்சலனால் நன்கு மதிக்கப் பெற்றார். மன்னன் பொருளாதாரத் துறையில் மேம்படுதற்கான வியத்தகு வழி வகைகளைக் காட்டினார். அதனால் அரசன் இவர் வயப்பட்டு மேலும் பல நலம் செய்தான். பெருமதிப்பு உண்டாக்கினான். பொதுமக்களும் இவரிடம் நன் மதிப்புக் கொண்டனர். ஆதரவும் அன்பும் காட்டி ஒழுகினர்.

ஆரிய வேத வைதிகக் கலப்பால் வீர சைவ மக்களிடையே பரவியிருந்த சாதிபேத உயர்விழிவு மயக்கங்களையும் பசவர் தெளியச் செய்தார். உலகம் முழுதும் கடவுளில்லை என்னும் நாத்திகப் புறமதக் கொள்கைகளை எதிர்த்து மறுத்து அவற்றின் போக்கு நாட்டுப் பொதுநலத்துக்குப் பொருத்தமின்றித் தடையாக உள்ளதையும் விளக்கிக் காட்டினார். வாய்மையும் பக்தியும் குடிகொண்ட பின்னரே பக்குவமறிந்து தக்கோர்க்கு மட்டும் சிவலிங்கத் தீட்சையும், லிங்காதரணமும் செய்ய வேண்டுமென்னும் பழைய கொள்கையை மாற்றினார். மக்கட்குச் சிவலிங்கம் பூட்டி அதனால் அவரையெல்லாம் வாய்மையும் பக்தியும் உடையவராக்கி முன்னேற்றினார். கொல்யாகக் கொள்கைகளை எதிர்த்தார். சமயநெறியில் இருந்த ஆண் பெண் பேத விவகாரங்களை ஒழித்துக் கட்டினார். சிவ பக்தரிடையே இருந்த தீண்டாமைப் பேயை விரட்டினார்.

இங்ஙனம் பொதுநலச் சமயத் தொண்டும், பிற தொண்டும் செய்துவருகையில் அமைச்சர் பலதேவர் காலமானார். அமைச்சியல் பிரதமர் பதவி காலியாயிருந்தது. நாட்டு அரசியல் நிர்வாகிகளின் நன்மதிப்பையும் முன்னமே பசவர் பெற்றிருந்தார். நிர்வாகிகள் பசவரையே பிரதமராக்க வேண்டுமென மன்னனை வலியுறுத்தவே வேறு வழியின்றி பசவரையே பிரதமராக்கினான். அரச போகமும், பதவி மோகமும் கருதாத பசவர் அரசியலில் தலைமை தாங்கத் தயங்கினார். மன்னன் விச்சலன் நான் உன் நிர்வாகத்தில் தலையிடுவதில்லை. உன் விருப்பப்படி அரசியலை நடத்தலாம். அரசாங்கப் பொக்கிஷமும், இராணுவமும் கூட உன் தலைமையில் இயங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருகிறேன். அரசியல் தலைமை ஏற்றிடுக என வாக்களித்து வேண்டினான். பொதுமக்கள் பேராரவாரத்துக்கிடையே பசவேசரும் பிரதமர் பதவி ஏற்றார்.

ஒரு மதக் கொள்கையைப் பரப்பவும், அதை உன்னத நிலைக்குக் கொண்டுவரவும் காரணமானவை அம்மதத் தொண்டரின் தூய்மை, தியாகம், அறிவு, ஆற்றல் போன்ற தகுதிகளே. இத்துடன் அரசாங்க ஆதரவும் பக்கபலமாக இருப்பின் பேருதவியாகும். இத்தகைய சூழ்நிலை இயற்கை யாகவே பசவருக்கு இப்போது அமைந்துவிட்டது. அரச பதவியுடன் பசவரின் இயற்கையாக முன்னமே அமைந்திருந்த கல்வி, அடக்கம், தியாகம், தாராள மனப்பான்மை, சமரச சமூக நல நோக்கம் போன்ற பண்புகளால் கவரப்பட்ட மக்க ளிடையே தம் கொள்கைகளைப் பரப்புவதற்காகத் தொண்டர் களையெல்லாம் திரட்டிச் சங்கம் அமைத்தார். அதன் மூலம் தன் கொள்கைகளைப் பரப்பினார்.

வீரசைவ சங்கமத் தர்மசாரணருக்கு கிடைக்க வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தார். இதனால் பசவரின் கொள்கைகளும், புகழும் பாரத தேசத்தின் பல பகுதிகளிலும் காட்டுத்தீ போல் பரவின. சிவத்தொண்டர்கள் பலர் பாண்டிய, சோழ, சேர, கூர்ஜர, ஓரிஸா, வங்காள, காஷ்மீர், நேபாள நாட்டுப் பகுதிகளிலும் வந்து வீரசைவ ஐங்கமராயினர். ஐங்கமத்தின் சீரிய கொள்கைகளையும், நேரிய நோக்கத்தையும் அறிந்த மன்னர்கள் பலர் ஐங்கமத்தில் சேர்ந்து தொண்டாற்றினர்.

இவர்களிற் பலரும் புலமை வாய்ந்த தத்துவஞானச் செல்வர்கள். இவர்களால் ஆராயப்பட்ட தத்துவஞானச் செய்திகளும் பிறவும் நூல்களாகத் தொகுக்கப்பெற்று இன்னும் உள்ளன. அன்றியும் பல்வேறு தொழில் பூண்ட ஐங்கமர் பலரும் பற்பல நாடுகளிலிருந்து வந்து கல்யாணபுரியில் பேதமின்றிக் கூடினர். இவர்கள் வரிசையும், பெயரும், தொண்டும், தொழிலும், சிறப்பும், பசவர் அமைத்த அனுபவ மன்றம் என்ற சங்கத்தின் வரலாறும் பிறவும் பற்றிக் கன்னட நூல்கள் பலபடச் சிறப்பித்து விவரிக்கும். பிரபுலிங்க லீலை, பசவபுராணம் என்னும் தமிழ் நூல்களாலும் இவற்றுள் சிலவற்றை அறியலாம்.

பசவரைப் பற்றிப் பிரபுலிங்க லீலை,

‘மொழியினால் நினைவால் நாக்கால்
முக்கணான் அடியார் வேண்டில்
ஒழிவிலா துதவித் தாய்போல்
ஓம்பினன் பிறமதத்தோர்
வழியெல்லாம் வழக்குமாற
மலிபுகழ்ச் சைவ மென்னும்
பழியிலா வழி நடப்பப்
பண்ணினன் பசவ தேவன்’

என்று சிவப்பிரகாசர் தமது நூலில் குறிப்பிடுகின்றார்.

உலகத்தில் தோன்றி விளக்கமுற்ற மற்ற மகான்களைப் போலவே இவரும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டு சமூக நலச்சேவையே சிவத்தொண்டென மானிட சமுதாயத்துக்குத் தம் கடமையை ஆற்றிவந்தார். சுருங்கச் சொல்லின் அண்ணல் காந்தியடிகளால் சமூக முன்னேற்றத்துக்கென வரையறுக்கப் பட்ட வாழ்க்கைத் திட்டங்கள் அனைத்தும், அக்காலத்தில் வீரசைவர்களுக்காகப் பசவேசரால் திட்டமிட்டு வளர்க்கப்பட்டு வந்தன. காந்தி மகானின் நிர்மாணத் திட்டம் அனைத்தும் - குடிசைத் தொழில், தினசரி வாழ்க்கை முறை, தியானம், பூசை, சேவை, பிறர்க்கென வாழ்தல், தீண்டாமை போன்றவை 12-ஆம் நூற்றாண்டிலேயே கருநாடக நாட்டில் பரவேசரால் பரப்பப்பட்டு வளர்க்கப்பட்டுவந்தன.

மக்கள் சமுதாய எழுச்சிக்குத் தர்மமே உயிர் சக்தியாகப் பயன்பட்டது. சமய வரலாற்றில் எக்காலத்தும் மதக்கருத்துகள்

இவ்வளவு உயர்வாகவும், அதிசயமாகவும் வளர்ந்ததில்லை. பசவண்ணர் எத்தனையோ அதிசயங்களைச் செய்து காட்டினார். அவர் செய்தனவற்றுள் மிக உயர்ந்தது சாதாரண மனிதன் தாழ்த்தப்பட்ட நிலையிலிருந்து இறைவனை உணரும் மெய்ஞானம் பெறக்கூடிய தத்துவ நிலையில் உயர்த்தப் பட்டதாகும்.

வியத்தகு மலர்களின் மணமும், நிறமும், அழகுமே அவற்றுக்கு எமனாக முடிவதைப் போலவும், தான் ஈன்று பெற்ற குலையே வாழைக்கு எமனாதல் போலவும், மகான்களின் சொல்முறை மாறாச் செயல்முறைப் பண்பும், பெற்ற செல்வாக்குமே அவர்களுக்கு எதிர்ப்பையும் சிலவேளைகளில் இறப்பையும் உண்டாக்கிவிடுகின்றன. அதைப்போலவே பசவருக்கு நிகழ்ந்துவிட்டது. சைனமதத்தைச் சேர்ந்த விச்சல மன்னன் தன் பிரதமருக்கு நாளுக்கு நாள் அதிகப்பட்டு வரும் செல்வாக்கையும், பலத்தையும் கண்டு அச்சமும், பொறாமையும் கொண்டான்.

'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிக்கு இணங்கி பாதகர்கள் பலர் பசவருடைய புகழில் பொறாமை கொண்டவர்கள், சுயநலக்காரர்கள், அரசருடைய மனப் பான்மையை நன்கறிந்து பிரதமர் பசவர் மேல் பலவித கற்பனைக் கோளுரைகளை அரசரிடம் சொன்னார்கள். முன்னரே மதிமயங்கிக் கிடந்த விச்சல மன்னன் பசவரிடமிருந்த அரசியல் அதிகாரங்களைப் பிடுங்கி அவரைச் சிறையில் அடைக்கவும் முயன்றான். ஆனால் அருள் மூர்த்தியாகிய பசவர்பால் நாட்டுப் பொதுமக்கள் அனைவரும் திடமாய் நின்றதால் மன்னன் எண்ணம் நிறைவேறவில்லை. ஆயினும் அரசன் சும்மா இருக்கவில்லை. பசவருடைய புகழைக் குறைத்து அவரைச் சிறையில் அடைக்கவே சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். பசவருடைய எதிரிகளால தூண்டப்பட்ட விச்சலன் நாட்டில் பெருமிதமாக வளர்ந்துவந்த வீரசைவ மதப் பிரசாரத்துக்குத் தடை விதித்தான். இடையூறு செய்தான்.

பசவரிடத்தில் காணப்பட்ட அருங்குணங்களும், சமூகப் பொதுநலத் தொண்டுகளும், சமரச சமூகக் கட்டுப்பாடுகளும், திட்டங்களும், தாராள மனப்பான்மையும், வெகுஜனச் செல்வாக்கும், அயல்நாட்டார் நன்மதிப்பும் பொதுமக்களால்

பாராட்டப்பெற்றன. என்றாலும் மக்களில் சிலர் அவர் தீவிரமாகச் செயல்படுத்திய சாதிபேத நடைமுறைச் சட்டங்களில் சிலவற்றை ஏற்கத் தயங்கினர். பசவரின் கொள்கைகள் பேச்சளவில் நில்லாது அவர் காலத்திலேயே அதிதீவிரமாகச் செயல்படுத்தப்பட்டன. இதனால் ஏற்பட்ட மேல் சாதியார் பலரின் எதிர்ப்பைப் பசவர் ஒருவாறு சமாளித்துக்கொண்டு தன் திட்டத்தைச் செயல்படுத்திவந்தார். கலப்பு மணங்களை ஆதரித்தார். அவற்றைத் தாமே முன்னின்று செய்துவைத்தார். இதனை மேல்சாதி செல்வச் செருக்கரும் விரும்பவில்லை. கீழ்சாதிப் பாமர மக்களிலும் சிலர் கலப்பு மணம், தீண்டாமை ஒழிப்பு ஆகிய செயல்கள் அடாத பாவச்செயல்கள் என மூடநம்பிக்கையால் எண்ணியிருந்தனர். பசவரின் கலப்பு மணக் கொள்கைகள் மட்டும் நாட்டில் தீவிரமாக ஏற்றுக்கொள்ளப் படவில்லை. எனினும் பசவர் விடாப்பிடியாகக் கலப்பு மணங்களை ஆதரித்துவந்தார். இது மூர்க்கமும், பிற்போக்கும், மூடநம்பிக்கையும் வேரூன்றி மேலிட்டிருந்த அந்நாளில் பசவருக்கு மேன்மேலும் பல எதிரிகள் தோன்ற ஏதுவாயிற்று. இதில் கலப்பு மணச் செய்தியில் பசவருக்கிருந்த உட்பகையும், வெளிப்பகையும் ஒன்று சேர்ந்துவிட்டன. எனவே பசவரின் கலப்புமணத் திட்டம் அவருக்கு எமனாயிற்று.

வீரசைவ மதத்தில் பசவர் காலத்தில் புதிதாய்ச் சேர்ந்த ஒரு பிராமண உத்தமர் மாதவையா என்பவர். இப்படியே வீரசைவ மதத்தில் புதிதாகச் சேர்ந்த ஒரு பஞ்சமர் ஹராலயா என்பவர். இவர்களுக்கு முறையே ஒரு பெண் மகளும், ஒரு ஆண் மகனும் இருந்தனர். இவர்களுக்குள் நட்பும் மற்றெல்லாவகைப் பொருத்தமும் மணம்புரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பமும் இருந்துவந்தன. பெற்றோர்களும் இதற்கு உடன்பாடு தந்தனர். இந்நிலையில் பசவர் தன் கலப்புமணத் திட்டத்தையொட்டி அவர்கட்குத் திருமணம் செய்து வைத்தார். கலப்பு மணம் முடித்து வைத்தார். வைதிகரிடம் வயிற்றெரிச்சலும், பாமரப் பொதுமக்களிடத்து முணுமுணுப்பும் உண்டாயின.

இந்தியத் திருநாட்டில் 800 ஆண்டுகட்கு முன் பிராமணீயமும் சாதிபேத உணர்ச்சியும் உச்சத்தில் இருந்த சமயத்தில் இத்தகைய சம்பவம் ஏனைய இந்துமத மக்களைத் திடுக்கிடச் செய்தது. பிராமணியத்தை மேற்கொண்டவர்களும்

விச்சல மன்னன் பரிவாரங்களுடன் ஆரவாரம் செய்தார்கள். எங்கும் எதிர்ப்பிரச்சாரம் செய்யப்பட்டது. இந்துமத தர்மம் அடியோடு போய்விட்டதாகச் சைன அரசனும் தூபம் போட்டான். அக்காலத்தில் உயர்ந்த குடிப்பெண்ணை தாழ்ந்த குடியில் பிறந்த ஒருவர் மணப்பது கனவிலும் கருதமுடியாத ஒன்று.

விச்சில மன்னன் பசவரை அடக்க, அழிக்க, விலக்க இதுதான் சமயமென்று இந்நிகழ்ச்சியை மிகைப்படுத்திக் கலப்பு மணம் முடித்துக்கொண்ட தம்பதிகளுக்குத் தண்டனை வழங்க ஆணையிட்டான். எத்தகைய தண்டனை? காட்டுமிராண்டிகளும் நாணும்படியான தண்டனை அது. கொடுமையிலும் கொடுமை. புதுமணம் முடித்துக்கொண்ட தம்பதிகள் இருவரின் கால்களும் கயிறுபோட்டுக் கட்டித் தெருக்களின் வழியாகவும் அன்றிச் சாகும் வரையில் நகர்ப்புறத்தே கற்களிலும் முட்களிலும்கூட இழுத்துப் போகும்படியான தண்டனையளித்தான்.

மன்னன் எதிரபார்த்தபடி இச்சம்பவம் பொதுமக்களை அச்சத்திற்குள்ளாக்கவில்லை. மாறாக மக்களின் உள்ளக் கொதிப்பை கிளப்பிவிட்டது. மன்னன் கனவு பலிக்கவில்லை. அரசன் மேல் ஆத்திரமும், பழிவாங்க வேண்டும் என்ற கொலையுணர்வும் மக்களிடையே உண்டாயிற்று. புயலும், எரிமலையும் ஒன்று சேரந்ததுபோல் மக்கள் கிளம்பினர்.

தன்னைப் பின்பற்றிய மக்களில் பலர் தான் இதுவரை உபதேசித்த அன்பு வழியை, சத்யாகிரகத்தை, அகிம்சையை, சகிப்புத் தன்மையை, எதிரிகளை மன்னிக்கும் மனப்பான்மைப் பெருங்குணத்தை உண்மையாகப் பெறவில்லை என்று பசவர் உணர்ந்தார். அதற்காக வருந்தினார். பொதுமக்கட்கும் தன் சீடர்களுக்கும் மேற்கண்ட உயர் குணங்களைக் கொடுத்தருளு மாறு ஆண்டவனிடம் முறையிட்டார். நாட்டு விடுதலைப் போரில் அகிம்சைவழி, அன்பு வழி, சத்யாகிரக நெறி தவறி மக்கள் பலாத்கார நெறியில் சென்றபோதெல்லாம் அண்ணல் காந்தியடிகள் உண்ணா நோன்பும், இறையருள் வேண்டி நினறதும் இங்கு நினைவுகூரத்தக்கது.

இறுதியில் தான் வழிபடும் தெய்வமான கூடல் சங்கமேசுரரிடம் தன்னை ஒப்படைத்துவிட்டார்! அர்ப்பணித்து

விட்டார்! உலகில் தீர்க்கதரிசிகளாக, மகாத்மாக்களாகத் தோன்றியவருள் சிலர் அடைந்த முடிவையே இயேசுநாதர், காந்தியடிகள் அடைந்த முடிவையே பசவரும் அடைந்தார்; மறைந்தார்; தமது முப்பத்து ஆறாம் வயதில் 1167-ஆம் ஆண்டில் பூதவுடல் நீத்துப் பொன்னுலகடைந்தார் குருதேவர் பசவர்.

வீரசைவ ஐங்கமருக்குப் பசவரின் கோட்பாடும் நடைமுறையுமாவன:

அதிகாலை துயில் எழுதல், சிறிது நேரம் கடவுளை நினைத்துச் செபம் செய்தல், சூரியன் தோன்றுமுன் நீராடல், உடனே இட்டலிங்க பூசை முடித்தல், பின் தொழிலில் ஈடுபடல் போன்ற பழக்கவழக்கங்களை வீரசைவர் பின்பற்ற வேண்டும். இலிங்க பூசை ஒவ்வோர் ஆடவனுக்கும் பெண்ணுக்கும் இன்றியமையாதது. இச்சிவ பூசை எக்காரணத்தாலும், எக்காலத்தாலும் விடத் தக்கதன்று. உயிர்க்கொலை, புலால் உண்ணல், கள் குடித்தல் இவை விலக்கு. ஊன், கள் போன்ற வணிகங்களில் ஐங்கமர்கள் ஈடுபடுவதில்லை. வீரசைவ தீட்சை பெற்ற பின் ஜாதி வேறுபாடு கூடா. கலப்பு மணம், விதவை மணம் உண்டு. எளிய வாழ்க்கை, திதி திவசப் புரோகிதச் சடங்குகளில்லை. அவற்றுக்கு ஈடாகக் குருபூசையும், ஐங்கம பூசையும் உண்டு. ஆரியப் புரோகிதர்க்கு இங்கிடமில்லை. இலிங்கத்தை அங்கத்தில் தரிப்பவர்கள் வீரசைவர்கள்.

பசவர் காலத்து வாழ்ந்த சிவசரணர்களில் ஒருவரான சென்னபசவண்ணர் 'பக்தியின் செழிப்பான விளைச்சலே பசவண்ணர்' என்று கூறுகிறார். பக்தியின் அவதாரமும், மகிழ்ச்சியின் உருவத் தோற்றமுமாய் இருப்பவர் பசவண்ணர் என்கிறார் சித்தராமர். பசவண்ணரின் வாக்குகளில் எந்தப் பகுதியைப் பிழிந்தாலும் பக்திரசம் பெருகும். பக்தி எனப்படுவது உயர்ந்த அன்பின் தன்மை வாய்ந்தது. ஆழ்ந்த அன்பு கடவுளிடம் படியும்போது தன்னலமில்லாமல் முழுமையும் படிகிறது. தெய்விக ஏக்கமே பக்தி மார்க்கத்தின் முதற்படி. பசவேஸ்வரரின் வாசகங்களில் இந்த தெய்விக ஏக்கத்தையும் அதிருப்தியையும் பக்திப் பாதையின் தொடக்கத்தில் ஏங்கிக் கூறுவதைக் கேட்கிறோம்.

இறைவனே இவ்வுலகில் தன் வலையில்
என்னை அகப்படுத்திவிட்டது. காப்பாற்றுங்கள்
ஓ என்னைக் காப்பாற்று இறைவா
மதிப்பெல்லாம் போனால் போனதுதான்
உன் கருணை மட்டும் இருக்கட்டும்
இறைவா உன் கருணையே கதி
கூடல் சங்கம தேவா
எனது எல்லையற்ற மகிழ்ச்சி
நான் என்னையே அளவற்ற
வருத்தத்திற்கு ஆளாக்கிக் கொள்கிறேன்.
என் மனதினுள் பார்க்க வேண்டாம்
அது ஒரு காட்டு அத்திப்பழம்
எனது வாழ்க்கை நெய்வாசனைக்காக
அரிவாளின் கூரிய பகுதியை
நக்கும் நாய் போல் ஆகிவிட்டது
நான் இப்போது வலையில் விழுந்த விலங்காகியுள்ளேன்
தெய்வமே! ஓ தெய்வமே!
நான் அழுகிறேன் எனக்குப் பதிலளிக்க மாட்டாயா?
அந்தோ! அந்தோ! ஓ சிவனே!
உன்னிடம் இரக்கம் என்பதில்லை
அந்தோ! அந்தோ! ஓ சிவனே!
உன்னிடம் கருணை என்பதுமில்லை
என்னை ஏன் பிறப்பித்தாய்?
இவ்வுலகில் பிரயாணம் செய்ய
வீட்டின்பம் பெறமாட்டாத அயலான்
எனக்கேன் பிறப்பளித்தாய்?
என்னுரை கேள்! கூடல்சங்கமோ
ஒரு மரமோ செடியோ எனக்குப் பதிலாக
பிறப்பித்திருக்கக் கூடாதா?

மரங்கள் என்னைவிட நல்லன. அவைகளாவது பயணிகளுக்கு நிழல் செய்கின்றன. இதுபோன்ற சொற்களில் பசவண்ணர் தெய்வயாத்திரிகளின் மனச் சங்கடத்தைப் புலப்படுத்துகிறார். இந்தத் தர்ம சங்கடமான நிலையிலிருந்து வெற்றியோடு வெளிவருகிறார்.